21.08.2024

O.S.NO.37/2022

PW1 திரு.பாபு

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

என்னுடைய தந்தை மன்னார் ரெட்டியாரின் இறப்பு சான்றிதழின் ஒளிப்பட நகல் வா.த.சா.ஆ.5. எனது தாயார் சாந்தா அவர்களின் இறப்பு சான்றிதழின் ஒளிப்பட நகல் வா.த.சா.ஆ.6. (வா.சா.ஆ.5, 6 அசல் ஆவணங்கள் பிரதிவாதியிடம் இருக்கின்றது). என்னுடைய தகப்பனாரின் வாரிசுகளை காட்டக்கூடிய வாரிசு சான்றிதழின் ஒளிப்பட நகல் வா.த.சா.ஆ.7. (அசலுடன் ஒப்பிடப்பட்டது) என்னுடைய உண்மையான பெயர் பாபு. என்னை ராதாகிருஷ்ணன் என்று அழைப்பார்கள். என்னுடைய பள்ளி சான்றிதழில் எனது பெயர் பாபு என்று குறிப்பிடப்பட்டிருகின்றது. வாரிசு சான்றிதழில் என்னுடைய பெயர் ராதாகிருஷ்ணன் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. என்னுடைய ஆதார் அட்டையின் ஒளிப்பட நகல் வா.த.சா.ஆ.8. (அசலுடன் ஒப்பிடப்பட்டது) இதில் என்னுடைய பெயர் பாபு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது பெயர் ராதாகிருஷ்ணன் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப அடையின் நகல் வா.த.சா.ஆ.9. (அசலுடன் ஒப்பிடப்பட்டது) பாபு என்கின்ற என்னுடைய பெயர் தான் ராதாகிருஷ்ணன் என்பதை பற்றி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பாண்டிச்சேரியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகல் வா.த.சா.ஆ.10. (அசலுடன் ஒப்பிடப்பட்டது) எனது பள்ளி சான்றிதழ் வா.த.சா.ஆ.11. (அசலுடன் ஒப்பிடப்பட்டது) எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகின்றேன்.